30.01.2026 OS.No.35/2024 PW2 Name :.கீதா ஸ்ரீபிரியா

குறுக்கு விசாரணை

1. நான் பி.காம் படித்துள்ளேன். எழுதியவர் என்பதற்கும் சாட்சி என்பதற்கும் உள்ள வித்தியாசம் எனக்கு தெரியும். குமார் வீட்டிற்கு சென்றுதான் நான் கையெழுத்து போட்டு ஆவணத்தை எழுதினேன். எழுதியவர் என்ற இடத்தில் ஆவணத்தில் நான் கையெழுத்து போடவில்லை. எனக்கு அரபு, உருது எதுவும் படிக்க தெரியாது. நான் கையெழுத்து போட்ட ஆவணம் பச்சை கலரில்தான் இருந்தது. அது பத்திர பேப்பர் கிடையாது.
2. குமார் வீட்டில் நான் கையெழுத்து போடும்போது நானும் குமாரும் அமுதாவும் இருந்தோம். வேறுயாரும் அந்த இடத்தில் இல்லை. காவல்நிலையத்திற்கு சென்றுவிட்டு வந்தபின் எத்தனை நாட்கள் கழித்து ஆவணத்தில் கையெழுத்து போட்டேன் என்பது நியாபகத்தில் இல்லை. காவல்நிலையம் சென்றுவந்த பின்புதான் ஆவணத்தில் கையெழுத்து செய்தேன்.
3. ஜமீனா காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததால் தான் குமாரை விசாரணைக்கு அழைத்தார்கள். காவல்நிலையத்தில் ஜமீனாவிற்கு ரூ.3,60,000/- தொகை குமார் கொடுக்கவேண்டும் என முடிவு செய்தார்கள். அதனால்தான் குமார் ஜமீனா மீதும் சபீக் மீதும் வழக்குகள் போட்டுள்ளார். அந்த விவரத்தை வழக்கறிஞரிடம் சொல்லியுள்ளேன்.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 30/01/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.01.30 16:15:26 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.